1979 மார்ச் 14]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, "1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 5/1979) திருத்தப் பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(எ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : துணைத் தலைவரவர்களே, இந்த 'ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்' என்பதில் இரண்டாவது காலத்திலே "As soon as delimitation work is completed, the draft electoral rolls will have to be published for receipt of objections and suggestions and after their disposal, the rolls will have to be finally published It will take more than six months to complete all these items of work" என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த வேலைகள் முடிவடைய 6 மாத காலத்திற்கு மேலாகும் என்று சொல்லப் பட்டிருப்பதால் 6 மாத காலத்திற்குள்ளாக நீங்கள் தேர்தலை நடத்துவீர்களா என்ற அச்சம் ஏற்படுகிறது. இந்த அச்சத்தைப் போக்குகின்ற வகையில் விரைவிலே தேர்தலை நடத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தேனாம்பேட்டை பகுதியில் வீட்டுமனை ஒதுக்கப்பட்டு, அதை இன்ஸ்டால்மென்ட் பேசில் தந்திருக் கிறார்கள். 12 வருஷத்திற்கு மேற்பட்டு பணத்தைக் கட்டி யிருந்தாலும் அவர்களுக்கு அந்த இடம் இன்னும் சொந்தமாக்கப் படவில்லை என்ற குறையைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஸ்லம் ஏரியா என்று சொல்லக்கூடிய இடங் களில் குடிதண்ணீர் வசதி இல்லை; லைட் வசதி இல்லை; சானிட்டரி பிராப்ளம் எல்லாம் இருக்கிறது என்று சொல் கிறார்கள். அதை எல்லாம் சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

@ 1979, பிப்ரவரி 15 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

கூவம் ஆற்றுக்கு இரண்டு பக்கத்திலும் இருக்கிற காலி இடத்தை மாநகராட்சி பயன்படுத்திக் கொள்வதன் மூலமும், லீசுக்கு அந்த இடத்தை மற்றவர்களுக்குக் கொடுப்பதன் மூலமும் மாநகராட்சிக்கு அதிக வருமானம் வர வாய்ப்பு இருக்கிறது. அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக கவுன்சிலர்கள் இல்லை என்ற காரணத்தால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ.க்கள் மக்கள் பிரதிநிதிகள் என்ற முறையில் குறைகளை எடுத்துச் சொன்னாலும் கூட அங்கே இருக்கின்ற அதிகாரிகள் அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். அதிகாரிகளுடைய இந்தப் போக்கை மாற்றி, எம்.எல்.ஏ.க்களும் மக்கள் பிரதிநிதிகளே என்ற அடிப்படையில் அவர்கள் சொல்லுகின்ற குறைபாடுகளை நீக்குவதற்கு ஏற்ற முறையில் அதிகாரிகள் செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தத் திருத்தச் சட்டத்தை வரவேற்று அமர்கிறேன்.

*<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து</u> : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மார்க்கபந்து அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களை நிச்சயமாக பரிசிலனை செய்கிறோம். சென்னை மாநகராட்சி 150 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, வரையறை செய்யும் வேலை முடிவடையும் நிலையில் உள்ளது. இப்போது வாக்காளர் பட்டியலை முழுமையாகத் தயாரிக்கின்ற பணி நடக்கிறது. அந்தப் பணி முடிந்தவுடன் தேர்தலை நடத்துவதில் கருத்து வேறுபாடு இல்லை.

இங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இல்லை என்றாலும் சென்னை மாநகராட்சிப் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லுகின்ற கருத்துக்களைக் கேட்க வேண்டுமென்று சொன்னார்கள். மாநகராட்சி அதிகாரிகள் நிச்சயமாக சட்டமன்ற உறுப்பினர்களுடைய கருத்துக்களைப் புறக்கணிக்க மாட்டார்கள். மாநகராட்சியினுடைய அதிகாரிகள் ஆனாலும் சரி அல்லது இங்கே இருக்கிற உள்ளாட்சித்துறை அமைச்சர் என்ற முறையில் நானாக இருந்தாலும் சரி, அவர்கள் தெரிவிக்கின்ற பல்வேறு குறைபாடுகளையும் அவ்வப்போது நீக்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அந்த வகையில் அரசு அலட்சியம் காட்டவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் மக்களுடைய குறைபாடுகளை எடுத்துச் சொல்லும்போது அதை நீக்குவது ஒரு நல்ல அரசினுடைய கடமை என்பதை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

1979 மார்ச் 14]

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு பேரவையின் நேரத்தை இன்னும் சில நிமிடங்கள் நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் துணைத் தலைவரவர்களே, வாக்காளர் பட்டியல் பூரணமாகத் தயாரிக்கப் பட்ட பிறகு சென்னை மாநகராட்சிக்கான தேர்தல் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் அதிகமாகப் பேசப்போவதில்லை. சென்னைக் கார்ப்பரேஷன் தேர்தலைப் பொறுத்தவரை கொஞ்சம் தாமதமாக நடத்தினால் கூடப் பரவாயில்லை. ஏனென்றால் இங்கே சென்னையைச் சேர்ந்த பல சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அமைச்சர்களும் சென்னையிலேயே இருக்கிறார்கள். ஆகவே பொதுமக்களுடைய குறைகளைக் கவனித்துக் கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது. அடுத்து தேர்தல் என்று பார்க்கின்றபோது நான் ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். அதாவது தேர்ந்தெடுக்கப்பட்டு கவுன்சிலர்களாக வருபவர்களுக்கு மாதாமாதம் சம்பளம் கொடுக்கவேண்டும். அவ்வாறு அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படாததன் காரணமாகத்தான் ஊழல் ஏற்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுப்பது போல் அவர்களுக்கும் சம்பளம் கொடுப்பதற்கு ஒரு சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். அப்போதுதான் அவர்களைக் கண்ட்ரோல் பண்ண முடியும். அவர்களுக்கு 500 ரூபாயாவது சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். 150 உறுப்பினர்களுக்கு மாதம் 500 ரூபாய் சம்பளம் கொடுப்பதில் ஒன்றும் பெரிய இழப்பு ஏற்பட்டுவிடாது. ஆகவே அதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே பார்லிமெண்டரி செக்கரட்டரியாக இருக்கின்ற மாண்புமிகு திரு. அய்சரி வேலன் அவர்களின் தொகுதியிலே நேதாஜி நகர் என்ற ஒரு பகுதி இருக்கின்றது. அங்கே ஆயிரக்கணக்கான குடும்பங்கள் போதிய வசதிகள் இன்றி வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் என்னுடைய உறவினர் ஒருவர் இருக்கிறார். அவருடைய வீட்டிற்கு நான் அடிக்கடி சென்று வருவது உண்டு. ஆகவே அந்தப் பகுதிப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். அங்கே தெரு விளக்குகளே கிடையாது. ரோடு வசதியும் சரியாகக் கிடையாது. கிராமங் களில் கூட விளக்கு எரியாவிட்டாலும் தூண்களாவது இருக்கும். இந்தப் பகுதியிலே விளக்குத் தூண்கள் கூட கிடையாது. சென்னை நகரிலேயே இப்படி ஒரு பகுதி விளக்குகளே இல்லாத நிலையில் இருக்கின்றது. இதுகுறித்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் செல்வி பி.டி.சரஸ்வதி அவர்களுக்குக் கூட கோரிக்கை

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மனு கொடுத்தேன். அந்த மனு கொடுக்கப்பட்டு இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. அந்தப் பகுதியிலே விளக்கு எரிவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

அடுத்து சென்னையைப் பொறுத்தவரையில் அண்ணா சாலையும், காமராஜர் சாலையும் தான் சாலைகளாகக் காட்சி அளிக்கின்றன. மற்ற சாலைகள் எல்லாம் மிக மோசமான நிலையிலே இருக்கின்றன. ஆகவே நம்முடைய அரசு தனிக் கவனம் செலுத்தி இந்த சென்னை நகரத்தைப் பொறுத்தவரை இருக்கின்ற சாலைகளையெல்லாம் மிக நல்ல முறையில் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். 'சிவிலைசேஷன் வாக்ஸ் ஆன் தி ரோடு' என்று சொல்வார்கள். இந்த சென்னை நகருக்கு வெளிநாடுகளில் இருந்தெல்லாம் நிறைய பேர் வருகிறார்கள். ஆகவே நம்முடைய நாட்டு மக்களுக்கு நாட்டிற்கும் மதிப்பு, மரியாதையை ஏற்படுத்தும் வகையிலே சென்னை நகரை அழகாக அமைக்கவேண்டு என்றுக் கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:</u> பேரவைத் துணைத் தலைவரவாகளே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன சீரிய கருத்தை நிச்சயமாக அரசு பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> பேரவை முன்னுள்ள கேள்வி— ''1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 & 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

<u>மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:</u> தலைவர் அவர்களே, ''1979 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1979) சட்டமாக நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

1979 மார்ச் 14]

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக்காலை 9·00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·36 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(8) பேரவையின் முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

எதுவுமில்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS